**செய்தி வெளியீடு எண்: 738** **நாள்:06.10.2020**

# மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் 06.10.2020 எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம்

இன்று (06.10.2020) சென்னையில் மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. கடம்பூர் ராஜு அவர்களின் தலைமையில் எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் செயல்பாடுகள் குறித்து நடைபெற்ற ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாநிலத்திலுள்ள அனைத்து அரசு அச்சக மேலாளர்களிடம் அவர் தம் அச்சகத் தேவைகள் குறித்த கோரிக்கைகளை கேட்டறிந்தார். மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்புகளின் செயலாக்க நிலை, பணிகளின் முன்னேற்றம் ஆகியவை குறித்து ஆய்வு செய்து விரைந்து நிறைவேற்ற நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

2016–2017 முதல் 2019–2020 வரையிலான நிதியாண்டுகளின் மானியக் கோரிக்கை எண்.30–ல் இடம் பெற்ற அறிவிப்புகளின் செயலாக்கத்திற்காக மொத்தம் **ரூ.11.61 கோடி** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

2016–17, 2017–18, 2018–19–ஆம் ஆண்டுகளில் **ரூ.9.04** கோடி மதிப்பீட்டில் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகிறது. 2019–2020 ஆண்டில் **ரூ.1.53** கோடி மதிப்பீட்டில் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருவதுடன் **ரூ.1.04** கோடி மதிப்பீட்டில் அரசு மைய அச்சகம் உள்ளிட்ட அனைத்து அலகுகளிலும் கட்டடப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

மேலும், ஆணையரகம் மற்றும் ஒன்பது அலகுகளில் செயலாக்கத்தில் உள்ள கட்டடப் பணிகளை விரைந்து முடிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறையின் செயலாளர் திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறையின் ஆணையர் திருமதி.ஆ. சுகந்தி, இ.ஆ.ப., மற்றும் அரசு அதிகாரிகள் கலந்துக் கொண்டனர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**